[1978 செப்டம்பர் 1

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள்

*வினு 30—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிதாகக் கடன் மனுக்களை வாங்க வேண்டாமென்று மாநில வீட்டு வசதி அலுவலகத்திலிருந்து தகவல் அனுப்பி உள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர வர்களே, 1—7—1975 முதல், புதிய கடனுதவி விண்ணப்பங்களைப் பெறலாகாது என்று தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்தத் தடை 5—1—1978 முதல் நீக்கப்பட்டு விட்டது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, தடை நீக்கப்பட்டு விட்டது. ஆனல் இன்று ஆங்காங்கு அனுப்பப்படும் மனுக்களை சேங்ஷன் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது, அதிகமான பணியாளர்கள் இல்லை என்ற காரணத்தால் மாநில வீட்டு வசதி சங்கத்தில் துரிதமாகப் பைசல் செய்யப்படவில்லை. அதேநேரத்தில் எல்.ஐ.சி. யிலிருந்து பணத்தை வாங்கி அதிக வட்டி கொடுத்து நஷ்டத்திலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைத் துரிதமாகப் பைசல் செய்ய, அதிகமான மனுக்களுக்குக் காலாகாலத்தில் கடன் கிடைக்கும் வகையிலும், அதிகப் பணத்தைக் கொடுக்கும் வகையிலும் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர வர்களே, 50 நூல் ஹவுசிங் சொசைட்டீஸ் என்று ஆரம்பித்து அதன் மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. 28,000 அப்ளிகேஷன்ஸ் வந்துள்ளன, அதில் 6,000-க்கு சேங்ஷன் செய்திருக்கிறோம், 2.9 கோடி ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டுள்ளது, அதில் 49 இலட்சம் கொடுக்கப் பட்டு வருகிறது, 4 தவணைகளில் அது கொடுக்கப்படுவது, தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஊஊலே

1978 செப்டம்பர் 1]

மாதத்திற்குள் கொடுக்க வேண்டியதைக் கொடுக்க முடியாமல் இருந்தாலும்கூட அதைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருவோம். இனி காலதாமதம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிராமப் பகுதிகளில் வீடு கட்டுகின்ற தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்திற்கு வட்டி கிடையாது. நகரத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வீடு கட்டுவதற்கு அதேபோன்று வட்டியில்லாமல் கொடுக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்று சொல்லி கிராமப்புற வீடு கட்டுவதற்குக் கொடுக்கப்படுவதில் அரிசனங்களுக்கு வட்டி இல்லை, அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு வட்டியுடன் கூடிய தொகை கொடுக்கப்படுகிறது, 5,000 ரூபாய். அது முடிந்த பிறகு நகர்ப்புறத்தில் இருப்பதைப் பற்றி நிதி ஆதாரங்களை மனத்திற்கொண்டு பரிசிலனை செய்யலாம்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வீடு கட்டக் கடன் கொடுக்கும் ரூபாய் 5,000 என்று இருக்கிறது, அதை 10,000 ரூபாயாக உயர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, 5,000 ரூபாய் மூலமாகக் கொடுக்கப்படுவதெல்லாம் சிறப்பாக முடிந்த பிறகு, நிதி ஆதாரம் நிரம்ப இருக்குமானால் பத்தாயிரம் என்ன, அதற்கு மேல் பதினைந்தாயிரம் கொடுப்பதைப் பற்றிக் கூட இந்த அரசு பரிசீலனை செய்யும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, 28,000 அப்பிளிகேஷன்கள் வந்திருக்கின்றன என்றும், ஆனால் 6,000 அப்பிளிகேஷன்களுக்கு மட்டும்தான் கடன் வழங்கப்பட்டது என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதமுள்ள அப்பிளிகேஷன்களெல்லாம் ரிஜெக்ட் செய்யப்பட்டதா அல்லது ஏற்றுக்கொள்ளப் பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 செப்டம்பர் 1

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எதுவும் ரிஜெக்ஷன் செய்யப்படாது, பணம் இருக்க இருக்கக் கொடுக்கப்படுவதுதான். நான் ஏற்கனவே சொன்னதைப்போல, 50 கிராமப்புறக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் காலதாமதம் ஆயிற்று. அது முடிந்துவிட்ட காரணத்தால் இனி விரைவாகக் காரியங்கள் நடைபெறும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகக் கடன் கொடுக்க என்னென்ன விதிமுறைகளை வகுத்திருக்கிறது? இந்த ஆண்டு மட்டும் எவ்வளவு தொகை வழங்கியிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எவ்வளவு விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று நான் தகவல் கொடுத்திருக்கிறேன். விதிமுறைகள் என்பது, 'எகனமிக்கலி வீக்கர் செக்ஷன்ஸ்' என்று சொல்லக் கூடியவர்களுக்குத் தருகிறோம். அதைப் பற்றி மேலும் விரிவான தகவல் வேண்டுமென்று சொன்னால் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்பொழுது கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் முறை இப்பொழுது குறைந்திருக்கிறது. கடன் கொடுக்கும் முறையிலே 50 சதவிகிதத்தைக் கடனாகவும், மீதி 50 சதவிகிதத்தை மானியமாகவும் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். இப்பொழுது அவர்கள் மாதம் 20 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இதனால் சாதாரண ஏழை எளிய மக்கள் மனுச் செய்யத் தயாராக இல்லாமல் இருக்கிறார்கள். எனவே, 50 சதவிகிதத்தை மானியமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு சலுகையுமே பெறாமல் இருந்தவர்களுக்கு இந்த அரசு புதிய சலுகையைச் செயல்படுத்தியுள்ளது. இது எந்த முறையிலே நடைமுறையிலே வெற்றி பெறுகிறது என்று

பார்ப்போம். வருகிற நிதி நிலை அறிக்கையில் மேலும் விரிவாக்கு வதைப்பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, 50 நூல் கூட்டுறவுச் சங்கங்கள் என்று அமைச்சர் அறிவித்தார். எந்த எந்த மாவட்டத்தில், எத்தனை எத்தனை சங்கங்கள் அமைத்தார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகம் பூராவும் உள்ள எல்லா 'ஏரியா' வையுமே 'கவர்' செய்துவிடும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் இணைக்கவில்லை யென்றால், அதோடு இணைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகம் பூராவும் இது 'கவர்' செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொன்னையாற்றின் குறுக்கே மேம்பாலம்

*வினா 31—**திரு. துரை முருகன்:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா வட்டம், பொன்னை யாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் வேலை முடிந்து விட்டதா?

(ஆ) இல்லை எனில், காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வேலையைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்ட ஒப்பந்தக்காரர் வேலையைச் செய்து முடிப்பதில் காலதாமதம் செய்ததால் அவரது ஒப்பந்தம் முடிக்கப்பட்டது. மீதமுள்ள வேலை 1978 செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் முடிக்கும் வகையில் நெடுஞ்சாலைத்துறை இலாகாவே பல சிறு ஒப்பந்தக் காரர்கள் மூலம் வேலையைச் செய்து வருகிறது.